151

போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

C. Venkatachalam S. 1941-43.

Editor … Lourduswami, B.A., L.T.
Publi…
R… …ining School, Trichinopoly.

… …ம்பர், டிசம்பர் **1946** மலர் **5, 6**

R. … …ஆசிரியர் பயிற்சிப்… …றுமுறை பாடசாலை, திருச்சிறுப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 2.

16 JAN … MADRAS
JL
ன211, N11PP
N146.37.5,6.
210,008

போதனு விஷயப் பூங்கொத்து

கொத்து 37]   15 நவம்பர், டிசம்பர் 1946   [மலர் 5, 6

பத்திராதிபர் குறிப்புகள்

நம் பாடசாலேத்தினக் கொண்டாட்ட வைபவம் சென்ற மாதம் 30-ம் தேதியன்று நடைபெறவில்லே. சில காரணங்களேக்கொண்டு அவ் வைபவம் பின்னுல் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. எந்த தேதியில் நடைபெறும் என்பதைப்பற்றி பிறகு அறிவிக்கப்படும். ஆனுல், சென்ற மாதத்தில் பிரசுரித்திருந்தபடி "கிருஷ்ணுஜி" அல்லது "நீதியின் வெற்றி" எனும் நாடகம் இம்மாதம் 9-ம் தேதியன்று நடைபெற்றது.

*   *   *   *   *

"ஏழையின் கண்ணீர்" என்ற தொடர்கதையை புது வருஷம் அதாவது 1947-ம் ஹு ஜனவரி மாதப் பூங்கொத்து மலரில் தொடங்கி பிரசுரித்துவர உத்தேசித்துள்ளோம்.

சென்னே கல்வி இலாகா

Fort St. George Gazette, page 438 dated 15—10—1946
Public Examination at the end of VIII Standard, April 1947

Notice to Private Candidates

1. The Public Examination at the end of VIII Standard will be held on the 8th and 9th April 1947.

2. Eligibility for admission to the examination in the 3 compulsory subjects viz., Language, Ely. Mathematics and History and Geography including Civics.

(1) Pupils who are holders of VIII Standard E. S. L. C. issued by the officers of the educational department; they should submit along with the applications original E. S. L. C.

(2) Candidates who have appeared for the VIII Standard Public Examination in the 3 compulsory subjects held in April 1942, '43, '44, '45 and '46 and failed; they should appear for all the three subjects once again.

MADRAS

3. Eligibility for admission to the Examination in English (optional) in addition to the 3 compulsory subjects.

(1) Holders of VIII Standard E. S. L. C. issued by the officers of the educational department should appear and pass in all the four subjects including English (optional) if they desire to secure eligibility for admission into Form IV of a secondary school.

(2) Candidates who have appeared for the VIII Standard Public Examination held in April 1945 and 1946, taking English as optional subject and failed, can appear for all the four subjects once again, as private candidates.

(3) Candidates who have appeared for the four subjects including English (optional) in the Examination held in 1945 and 1946 and passed only in the 3 compulsory subjects but failed in English, can appear for all the four subjects as private candidates to secure eligibility for admission into Form IV of a secondary school, after passing the four subjects.

(4) A candidate who took English as an optional subject for the Examination of 1945 or 1946 but did not appear for the subject and passed in the three compulsory subjects, can appear privately, for all the four subjects including English, provided the candidate submits along with the applications for admission to the Examination, a certificate signed by the head of the Higher Elementary School from which the candidate was presented for the Examination in 1945 or 1946, to the effect that the candidate has studied English at least, in VIII Standard and put in the prescribed attendance.

(5) Candidates who have previously appeared and failed in the VIII Standard Public Examination held in the years, viz., 1942, '43 and '44 can offer English also in addition to the three subjects, viz., Language, Ely. Mathematics and History and Geography including Civics.

தமிழ்நாடு ... காப்பக ...
210008

4. Eligibility to appear privately for the examination in English (optional) only :—

Candidates who have passed the VIII Standard Public Examination held in the years, viz., 1942, '43 and 1944 may appear privately for the VIII Standard Public Examination to be held in April 1947 for English alone as their optional subject and thus qualify themselves for admission into Form IV of secondary schools, or if they desire to appear for the English Examination after a study of this language in any recognized Higher Elementary School, they have to put in one year's study in Standard VIII for English alone or 75 per cent of the required attendance in a recognized school. But, if such candidates fail in English at the VIII Standard Public Examination, they will not be considered to have failed in the whole examination. The certificates obtained by them previously will not be affected.

Candidates who have passed the three compulsory subjects in 1945 or 1946 examination and those who appeared for the four subjects including English but who have passed only in the compulsory subjects and failed in English, are not eligible to appear for the examination in English (optional) only.

5. Demobilised soldiers will be allowed to appear for the VIII Standard Public Examination as private candidates irrespective of their general educational attainments before or after joining the Army. Such candidates should submit along with their applications for admission to the examination a certified copy of the certificate of their discharge from military service.

6. Holders of transfer certificates declaring them fit for promotion from Forms III, IV and V of secondary schools are not eligible to appear as private candidates.

7. *Examination fees :*—The fee prescribed for the examination is Rs. 2 for all the four subjects, and As. 8 if English alone, is to be brought up by those who

have already passed the examination in the years 1942 to 1944. The fee must be paid into a Government Treasury.

8. *Application forms—Procuring of—Last date of submission of:*—Forms can be had from the Deputy Inspectors of Schools or Sub-Assistant Inspectress of Girls' Schools. Candidates should send in their applications direct to **The Secretary to the Commissioner for Government Examinations,** Cathedral Post Office (Madras), not later than 30th November 1946. The Treasury Receipt for the fee paid and the E. S. L. C. should be securely fastened to the application. In the case of candidates who have already appeared and failed in the Public Examination, full details with regard to the previous register number, name of district and centre and other particulars should be furnished.

For further full particulars readers are referred to the Gazette.

விளக்கம்: *நாடோடிப் பாக்கள்*

[த. ப. நாதன் “*புத்தொலிக்*” *காரியாலயம்,*
வசந்தராயப்பிள்ளை தெரு, தெப்பக்குளம் P.O., *திருச்சி.*]

நீர்ப்பரப்பில் தவழ்கிறது தாமரை! அதன் அழகைக் கண்ணுற்ற நாம் அதிசயிக்கிறோம்; ஆனால் அதன் அடியில் அமிழ்ந்திக் கிடக்கும் சேற்றையும் சகதியையும் பொருட்படுத்துகிறோமா? இல்லை! இதைப் போலவே, மானிட சமுதாயத்தின் கண்கட்கு கிராமவாசிகள்—தியாகிகளாகத் தோற்றுகிறார்கள்!

கோழி கூவியதிலிருந்து கோட்டான் அலறும்வரை—அல்லும்பகலும் அயராது உழைக்கிறார்கள்! நெற்றி வேர்வை நிலம் சிந்தப் பாடுபடுகிறார்கள்! தன்னலம் விடுத்து இத்தரணியின் நலத்தைப் பொன் எனக் கருதிப் பொழுதெலாம் உழைக்கிறார்கள்! ஆம்! இவற்றையெல்லாம் நகர மாந்தர் இலட்சியம் செய்வதில்லை; கிராமவாசிகளின்பால் அணுத்துணையும், கிஞ்சித்தேனும் இரக்கம் காட்டாமல், ‘தியாகிகள்’ என்ற மேல்பூச்சைத் தடவிவிடுகிறார்கள்!

அசதியைக் கிள்ளி அறிவினைக் கிளப்பி, அலையும் மனத்தை அடக்கி நிறுத்தி அறிவு புகட்டும் சாதனங்களில் ஒன்று—இசை! இத்தகைய இசையின் இனிமையால்தான், கிராமவாசிகள் தத்தம் வேலைகளைத் தடையின்றிச் செய்து, மண்ணுலகைக் காப்பாற்றுகிறார்கள் என்பதை, அவர்களு

டைய நாவிலே அடிபடும் பாடல்களைச் சற்று ஊடுருவிப்பார்ப்பின் தெரிய லாம்! அந்தப் பாடல்களைத்தான் நான் இங்கு '**நாடோடிப் பாக்கள்**' என்று குறிப்பிடுகின்றேன். வாய்மொழிப்பாடல், கிராமப்பாடல் என்றும் சொல்வார்கள்.

கிராமவாசிகள் செய்யும் ஒவ்வொரு அலுவலிலும் எண்ணற்ற நாடோ டிப்பாக்கள் இசையுடன், பயின்று வருகின்றன: வண்டிக்காரன் 'தெம் மாங்கு' பாடுகிறான்; நீரிறைப்பவன் 'ஏற்றப்பாட்டு' பாடுகிறான். பெண் மணிகள் வயல்களிலே நடவு நடுங்காலையிலும் களையெடுக்குங் காலத்திலும் பாடியவண்ணமே தத்தம் வேலைகளைச் செய்கின்றனர்; குழந்தையைத் தூங்கவைக்க 'தாலாட்டு'; யாராவது இறந்துவிட்டாலும் 'ஒப்பாரி'; இம்மட்டுமோ? கலியாணத்திலுங்கூட 'நலுங்கு' பாடுகிறாள் திருமணக் கன் னிகை! சுருங்கச்சொல்லின், பெயரளவில்மட்டும் 'உரைநடை' என் னும் கூற்றை விலக்கிவிட்டுப் பார்ப்பின் எல்லாம் 'பாடல் மயமாக' இருப் பதைக் காணலாம் கிராம வாழ்க்கையில்! இங்ஙனமாக கிராமவாசிகளின் 'இசை வாழ்வில்' கலந்து வருகின்ற நாடோடிப் பாக்களைப்பற்றிச் சிறிது பார்ப்போம்.

ஈடும் எடுப்பும் இல்லாத எழிலுறும் வண்ணக் காட்சிகள் பல, கிராம வாழ்க்கையிலே தொன்றுதொட்டுக் காணக்கிடக்கின்றன. இந்தக் காட்சி களில் ஒவ்வொன்றையுமே ஒவ்வொரு நாடோடிப் பாடலும் நமக்குப் படம் பிடித்துக்காட்டுகின்றன, இசையுருவத்தில்! எனவே, நாடோடிப் பாடல் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு உயிர் ஓவியம் எனின் மிகையாகாது.

நாடோடிப் பாக்கள் இலக்கண வரம்புக்கு உட்பட்டவையல்ல; மருந் துக்கும் அவற்றுள் இலக்கணத்தைக் காணமுடியாது; ஒருமை பன்மை என்ற வேறுபாடுகள் கூட, நாடோடிப் பாக்களில் கிடையாதென்றால் அதி கம் சொல்வானேன்? இலக்கணம் இல்லையென்பதால், இலக்கண கண் ணாடியை மாட்டிக்கொண்டிருக்கும் பண்டிதர்கட்கு அப்பாக்கள் பிடிக்காம லிருக்கலாம்; ஆனால் காய்தல் உவத்தல் அகற்றி கவிகள் யாவற்றையும் சுவைக்கக்கூடிய திறம் வாய்ந்த ஒரு ரஸிகன் அவற்றைச் சுவைக்காமல் இரான் என்பது தெளிவு! நாட்டுக் கவிஞர் பாரதியாரைத்தான் எடுத் துக்கொள்வோம், அவரும் நாடோடிப் பாக்களில் உள்ளத்தைப் பறி கொடுத்துவிட்டு, அவற்றைச் சுவைத்துச்சுவைத்துஇன்பங் கண்டவர் என் பதை, அவர்தாமே பாடிய 'குயில்' பாட்டிலிருந்து வெளியிடை மலை யென அறிந்துகொள்ளலாம்!

எளிமை, தெளிவு, இன்னிசை இம்மூன்றையும் நாடோடிப் பாக்க ளில் காணலாம்! அவற்றின் பொருளைப் புரிந்துகொள்ள அகராதிகள், நிகண்டுகள் தேவையில்லை; கேட்டமாத்திரத்திலேயே சுவைக்கலாம். விஷயத்தைப் புரிந்துகொள்ள தலையைச் சுற்றி மூக்கைப் பிடிக்காமல், நேரே படித்து அல்லது கேட்டு அறிந்துகொள்ளலாம். கிராம மக்களின் வாழ்வு 'இசை வாழ்வு' என்பதால், அவர்களுடைய நாவிலே பயின்று

வருகின்ற பாடல்களிலும் இன்னிசை இருக்கத்தானே வேண்டும்? எனவே இம்மூன்று சிறப்பியல்களையுங் கொண்ட இப்பாடல்களை, திராட்சைக்கனிகட்குத்தான் ஒப்பிடமுடியும்!

“ஒரு கவிக்கு விஷயம் எதுவாயும் இருக்கலாம்; ஆனால் எடுத்துக் கொண்ட விஷயத்தில் ஆழ்ந்த ஆர்வம் இருக்கவேண்டும். அஃதாவது ஆசையோ வெறுப்போ அழுத்தமாக இருக்கவேண்டும். இவற்றையே ‘ரசங்கள்’ என்று நம்மவர் குறிப்பர்”—இது நான் சொல்வதல்ல; தமிழ் நாட்டார் யாவருக்கும் அறிமுகமான இலக்கிய விமரிசகர் ஒருவர் குறிப்பிடுவது. இந்தக் கூற்றை மனத்தில் பதித்துக்கொண்டு, முன்னைய ‘பூங்கொத்தில்’ வெளிவந்த ஒரு பாடலைக் காண்போம்:

நள்ளிரவில் அழுதுகொண்டிருந்த ஒரு பெண்ணைப் பார்த்து, மற்றொரு பெண், அவள் அழுவதற்கான காரணத்தைக் கேட்பதாக பாடலின் போக்கு. அப்படி கேட்பதைத்தான் எத்தனை சுவையோடு அந்த நாடோடிக் கவிஞன் அமைத்துவிடுகிறான்!

“என் அழுதாய் பெண்ணே!—இளம்
மான் அழுதால் போல—இளம்
மான் அழுதால் போல—உன்னை
மாமன் அடித்தானோ?”

சொற்களைப் பொறுத்தமட்டிலும் எளிமை; கவிதைக்கே சிறப்பான ஓசைநயமும் இந்தப்பாடலில் பொதிந்துக்கிடக்கிறது; ஒவ்வொரு அடியிலும் மோனை இரண்டாவது அடியைத் திரும்பவும் ஒருமுறை சொல்லுவதால், பாடலானது கேட்போர் மனத்தில் பதிந்துவிடுவதற்கு ஏதுவாகிறது. இம்மட்டுமா? அரிய உவமை நயம்! “என் அழுதாய் பெண்ணே? உன்னை மாமன் அடித்தானா?” என்று கேட்டால் அது கவிதையல்ல; சாதாரண வசனம்தான்! ஆனால் அப்படிக் கேட்பதற்கு மாறாக “இளம் மான் அழுதால்போல” என்று கூட்டிச் சொல்லுவதனால் உவமைநயம் பொருந்த உவகை மூட்டுகிறது! போதாக்குறைக்கு அதே வரியைத் திரும்பவும் ஒருமுறை சொல்வதால் சோகமே உருவெடுத்தாற்போல அந்தப் பெண்ணும் நம்முடைய மனக்கண்ணின்முன்னே தோன்றிவிடுகிறாள்! கடைசி அடியில் கடைசி எழுத்தான ஓகாரம் கவியின் ஆர்வத்தை மேலே தூக்கிவிடுகிறது. உண்மையான நாடோடிப் பாடலின் இலக்கணம் மேற்சொன்னவைதான்; ஏன்? உண்மையான கவிதைக்கும் மேற்சொன்னவற்றையே இலட்சணமாக சொல்லலாம்!

மேலே குறிப்பிட்ட பாடலில் விஷயமானது சாதாரண விஷயம்தான்; ஆனால் அந்த விஷயத்தை வெளிப்படுத்திய முறையிலே பலவேறு நயங்களும் ஒருங்கே வந்து பொருந்த, ‘நவில்தொறும் நூல்நயம் போலும்’ என்பதற்கே ஒரு உதாரணமாகிவிட்டது அந்தச் சிறிய பாடல்!

நாடோடிப் பாடல்களில் பெரும்பான்மையான பகுதியை முப்பெரும் பிரிவுகளில் அடக்கிவிடலாம். சோகம், வீரம், காதல்! உதாரணமாக,

வேலமரப் பாதையிலே—என்று தொடங்கி வெளிவந்த பாடல் காதலின் பாற்படும். சென்ற இதழில் 'பெருங் குறை' என்ற தலைப்பின்கீழ் வெளியான பாடல் கோவை சோகத்தின்பாற்படும். மேலும் கடவுளின் மேல் பக்தியை எழுப்பும் பாடல்களும், பிறவும் நாடோடிப் பாக்களாக கிராம மக்களிடையே வழங்கிவருகின்றன !

பழந்தமிழ்க் காவியங்களில் பரந்திருக்கும் இலக்கியச் சுவையையும் ஆங்காங்கே காணலாம் கிராமப்பாடல்களில் ! சான்ருக, சிலப்பதிகாரத்தின் கண்ணகி வழக்குரை காதையில், வழக்குரைக்கச்சென்ற கண்ணகியை "நீ யார்" என்று பாண்டியன் கேட்டதற்கு, விடையாக—தன்னுடைய சரித்திரத்தையே சுருக்கித் தெரிவித்தாள் கண்ணகி ! என்? குறுக்குக் கேள்விக்கெல்லாம் இடமில்லையன்ரு ! இதேபோல, "மாமன் அடிந்தானே ?" என்ற ஒரே கேள்விக்கு, மடமடவென்று பதில் சொல்லி முடித்தாள் அந்த அணங்கு ! என்? "மாமன்தான் அடிக்கவில்லை ; வேறு யாராவது அடித்தார்களா ?" என்று கேட்க இடமிருக்குமல்லவா ?

அருமையான சொற்பிரயோகங்களையும் ஆங்காங்கே காணலாம் நாடோடிப் பாக்களில் !

மூங்கிலிலை மேலே
தூங்குபனி நீரே !
தூங்குபனி நீரை
வாங்கு கதிரோனே !

இந்தச் சிறிய பாடலில், 'தூங்கும் பனிநீர்' என்பதற்கு 'தொங்குகின்ற பனித்துளி' என்றே பொருள் கொள்ளவேண்டும் ; 'தூங்குதல்' என்ற பதம் பிற்காலத்தில்தான் உறக்கத்திற்குப் பொருளானது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, நாடோடிப் பாக்களின் பழமையையும் நாம் ஒருவாறு ஊகித்துக்கொள்ளலாம் !

நாடக நூல்களில் வரும் கதாபாத்திரங்களின் குணவிசேடங்களை, நாடக ஆசிரியர், அவரவர் தம் பேச்சு, கிரிகை, நடிப்பு இவற்றிலே புகுத்தி விடுவார்கள். உதாரணமாக, சற்குணன் என்ற நாமத்தோடு ஒருவன் நடித்தானுயின் அவனுடைய பேச்சு, கிரிகை யாவும் நல்ல முறையிலேயே சாந்தமாகவே இருக்கும். ஆனுல் துர்க்குணன் என்ற பெயரோடு ஒருவன் இருந்தால் அவனுடைய பேச்சு முதலியன நேர்விரோதமாயிருக்கும். இந்தத் திறமையானது நாடோடிப் பாக்களிலும் ஆங்காங்கே காணப்படும் !

நடையுடை பாவனைகளில் நகரமாந்தரிடம் நாகரிகத்தைக் காணலாம் ; ஆனுல் கிராமத்திலுள்ள மக்களிடம் நாகரிகத்தைக் காணலாம். எதில்? சொல்லும்முறை, பேசும்முறை—இவற்றில். காட்ட வேண்டுமோ ?

காலையில் கோட்டை கட்டி
கடும் பகலில் யுத்தம் செய்து
மாலையில் விரித்துப் போடும்
மன்ற வீரன்.

சலவைத் தொழிலாளியைப்பற்றி குறிப்பிட எவ்வளவு நாகரிகமான மொழிகள்! இந்த அடிகளை மனத்திற் பதித்து சிந்தனை செய்து பார்ப்பின், கிராமத்திலே வாழும் எளிய மனிதர்களின் குண விசேடங்களைத்தான், சிறப்பியல்புகளைத்தான், நாடோடிப்பாக்கள், படம் பிடித்துக் காண்பிக்கின்றன, என்ற உண்மையும் புலனாகும்.

மாதம் ஒருமுறை பூத்து, மணம் வீசும் நம் '**பூங்கோத்தின்**' மூலமாக, நாடோடிப்பாக்களைப்பற்றிய விமர்சனங்கள் செய்து, அதன்வழி ஆசிரிய தொண்டு செய்துவரும் உயர்திரு. '**தாதைக்கண்ணன்**' அவர்களை இக்கட்டுரையின் இறுதியில் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை! ஏன்? நாட்டுசேவை செய்யும் ஆசிரியர்கட்கு அவர் ஒரு புது முறையை வகுத்துக் காட்டுகிறார்! எப்படி? கிராம இலக்கியமாய நாடோடி இலக்கியத்தைத் தான் கிராம மக்களும் விரும்புவர்; எனவே, வெறும் வாய்ப்பாட்டாக மட்டும் இவற்றைச் சொல்லிவரும் கிராமத்தாருக்கு, இப்பாடல்களிற் பொதிந்துகிடக்கும் ரஸங்களை அவரவர் தகுதிக்கேற்ப எடுத்துரைத்து, மாணவர், பிள்ளைகட்கும் இவற்றை நயமாகப் போதித்துவந்தால், கிராமங்களில் ஆரம்பகல்வி பரவவும், பெற்றோர்களின் ஒத்துழைப்பையும் பெற்று, ஆசிரியர்கள், குறிப்பாக ஆரம்ப ஆசிரியர்கள், நாட்டுக்கு உயரிய தொண்டு ஆற்ற சாத்தியமாகும்! இதுதான் பூங்கொத்தின் விமர்சகர்—தாதைக்கண்ணன்—அவர்களின் முக்கிய குறிக்கோளாகும்!

குறிப்பு :—"தாதைக்கண்ணன்" அனுப்பியுள்ள "கிராமச்சித்திரம்" III-எனும் கட்டுரையை அடுத்த "பூங்கொத்து" மலரில் பிரசுரிக்க எண்ணியிருக்கிறோம். [ப-ர்.]

விளையாட்டுகள்

M. A. AMIRTHANATHAN, R. C. H. School, Trichy.

கொத்து 37, மலர் 4, பக்கம் 80-ன் தொடர்ச்சி

1. **மலைமேல் தீ—ஓடு, ஓடு, ஓடு.**

(Fire on the mountain Run! Run!! Run!!!)

வகுப்பில் உள்ள பிள்ளைகளை ஜோடி ஜோடியாக இரட்டை வரிசையில் முகத்திற்கு முகம் நிறுத்தி, ஒருவனை வட்டத்தின் மையத்தில் நிறுத்தவும். இவன் "மலைமேல் தீ—ஓடு, ஓடு, ஓடு" என்று சொல்வான். எல்லோரும் இடதுபுறமாய்த் திரும்பி, வட்டத்தின் வெளியில் சுற்றிச்சுற்றி ஓடவேண்டும். 'தீ அணைந்துபோனது' (Fire out) என்று கூவினவுடன், எல்லோரும் இரண்டு இரண்டு பேர்களாக கைகோர்த்துக் கொண்டு, நடு வட்டத்திற்குள் உட்காரவேண்டும். அதே சமயத்தில் நடுவில் இருப்பவனும் யாதாமொருவனுடன் கைகோர்த்துக்கொள்வதன் மூலம் தப்பிக்கப் பிரையாசை யெடுப்பான். யாருக்கு ஜோடி அகப்படவில்லையோ, அவன்மீது ஒரு குற்றமாகும். ஒவ்வொரு தடவைக்கும் ஒவ்வொருவன்மீது குற்றமேற்படும். யார்மீது 3 தடவைகளுக்குமேல் குற்றங்கள் ஏற்படுமோ, அவரைத் தண்டிக்கலாம்.

2. வட்டத்தில் கரடி. (Bear in the Pit.)

வகுப்பில் உள்ள ஒருவனைத்தவிர, மற்றவர்களை வட்டமாக, கைகளைக் கோர்த்து, நிற்க வைக்கவும். மத்தியில் இருப்பவன் கரடி. குறிப்பிட்ட நேரத்தில், கரடி, வட்டத்தில் இருப்போரின் கைக்கோர்வைகளை விலக்கிக் கொண்டோ, அல்லது அக்கோர்வைக்கு மேலே, அல்லது கீழே தாவியோ, அல்லது கால்களுக்கு இடையில் புகுந்தோ, தப்பி வெளியே ஓடும். கரடி வெளிப்பட்டவுடன், எல்லோரும் கைக்கோர்வைகளை நீக்கி, கரடியைப் பிடித்து நிறுத்தவேண்டும். எவன் முதலில், கரடியை நிறுத்துகிறானோ, அவன் அந்த இடத்திலிருந்து, கரடியின்மீது சவாரி செய்யலாம். மற்றவர்கள், மிருகங்களைப்போல் நாற்கால் பாய்ச்சலில் ஆடும் இடத்திற்குச் செல்லவேண்டும். ஆட்டம், மறுபடியும், தொடரும்: கரடியின்மீது ஏறி வந்தவன் அடுத்த ஆட்டத்திற்கு கரடியாகவேண்டும்:

குறிப்பு: ஒவ்வொரு தடவையும், நாற்கால் பாய்ச்சலில் வருவதற்குப் பதிலாக, நொண்டவும், குதிரை ஓட்டம் ஓடவும், குட்டிக்கரணம் அடிக்கவும் செய்யலாம்:

3. இரண்டு நாய்களும் ஓர் எலும்பும்.
(Two dogs and a bone.)

மாணவர்களை உயரத்திற்குத் தக்கபடி, இரண்டு சமபாகமாகப் பிரித்து, அவர்களை சுமார் 40 அல்லது 50 அடி தூரத்தில், எதிர் எதிராக இரண்டு வரிசைகளில் நிறுத்தவும். இரண்டு வரிசைகளுக்கும், வலப்புறமிருந்து எண்ணிக்கையிட்டு, அவைகளுக்கு இடையே நடுவில் ஓர் சிறிய வட்டம் வரைந்து ஏதாவது ஓர் பொருளை வைக்கவும்.

ஆசிரியர் எந்த எண்ணைக் கூப்பிடுவாரோ, அந்த எண்ணிக்கை உள்ள இருவரும், வட்டத்திற்கு ஓடிவந்து, பிறனால் தொடப்படாவண்ணம், பொருளை எடுத்துக்கொண்டு, தன் கக்ஷிக்குச் செல்லவேண்டும்.

ஜெயம் கணிக்கும் முறை:

ஒருவன் விரோதியால் தொடப்படாமல், பொருளைத் தன் கக்ஷிக்குக் கொண்டு சென்றால், அக்கக்ஷிக்கு 1 மார்க்கு வீதமும், தொடப்படின் தொட்ட கக்ஷிக்கு 1 மார்க்கு வீதமும், மொத்தம் சேர்த்து, எக்கக்ஷி அதிக மார்க்குகள் பெறுமோ, அது ஜெயமுற்றதாகக் கருதப்படவேண்டும்.

குறிப்பு: 1. ஆட்டம் முடிவடைய, ஒன்றில், பொருள் ஏதாவது ஒரு கக்ஷியாரால் எடுத்துச் செல்லப்படவேண்டும். அல்லது, அவ்வாறு எடுத்துச் செல்லும்போது, அவன் விரோதியால் தொடப்படவேண்டும்.

2. எடுத்துச் செல்லும் ஒருவன், விரோதி நெருங்கிவிட்டதை எண்ணி, பொருளைக் கீழே விட்டுவிடலாம். அவ்வாறு போட்டபின் தொட்டால் அது சேர்க்கப்படமாட்டாது. பொருள் கிடைக்கும் இடத்திலேயே இருந்தபடி ஆட்டம் தொடரும்.

3. இந்த ஆட்டத்திற்கு கக்ஷிக்கு 10-க்குக் குறைந்த பிள்ளைகளை வைத்துக்கொள்வதால், உற்சாகமும் கவனமும் அதிகம் ஏற்படும்.

(தொடரும்)

புழுதிபடிந்த பொன்மொழிகள்

[தே. நாதமுனி]

மதிப்பரிய மாணிக்கத்தின் மதிப்பறியமாட்டாதவன் அதின் ஒளியுடைய ஒருவகைக் கல்லெனவே கருதுவதன்றி ஆயிரம் ஆயிரம் பொற்காசுகள் கொடுத்தும் பெறற்கரிய பெருமணி என்று எண்ணுன். தன்மையறியான்மாட்டுள்ள மாணிக்கம்போல உண்மை உணரார்மாட்டு உபகதைகள் உலவுகின்றன. உடைவாளின் தன்மையை உறையை நீக்காமலே காணுமா போலே பழமொழிகள் பல மாசுபடிந்து பதிப்பிழந்து தோன்றக் காண்கின்றோம். அத்தகைய பழமொழிகளில் நாய்காணிற் கற்காணுவாறு என்பதும் ஒன்று. நாயைக் கண்டால் கல்லைக் காணேம், கல்லைக் கண்டால் நாயைக் காணேம் என்பது உலகியல்பு.

நாயைக் காணும்போது அதை அடிக்கக் கல்லும், கல்லைக் காணும் போது அதைக்கொண்டு அடிப்பதற்கு நாயும் கிடைக்கவில்லையே என்ற பொருளில் வழங்குகின்றது. தலைவனிடத்து நன்றியுடைமையில் தனக்கு இணையில்லாத நாயைக் கண்டதுமே அதை அடிப்பதற்கு எழும் எண்ணம் கயவர்மாட்டுதிக்கும்; கயமைக்குணமாவதல்லது உயர்குணமுடையார் உள்ளத்துதிக்கவல்ல உத்தமகுணமாகாது. நாயினல் வரும் ஆபத்தைப் போக்கிக்கொள்ள தற்காப்பிற்காவது கல் கிடைப்பதில்லை என்றாலோ கல்லைக் கண்டால் நாயைக் காணேம் என்பது பொருளற்றதாகின்றது. நல்ல கல்லொன்றினைக் கண்ட உடனே அதனல் அடித்து வீழ்த்த நாயொன்றையுங் காணேமே எனக் கலங்குவது கயவர்மாட்டும் காண்டற்கரியதோர் வழக்கமாகும். ஆதலின் இதன் உள்பொருள் மறைந்து பொருந்தாப்பொருளாகிய வெளிப்பொருளே பொருளாகக்கொண்டு வழங்கிவிட்டது. ஆதலின் இதன் மெய்ப்பொருள் யாதென நோக்குவோம்.

இரவில் இருளிலே செல்பவன் ஒருவன் வழியில் கிடந்த கயிறின் அருகில் சென்றதும் அது பாம்புபோலக் காணப்பட்டதால் பாம்பெனப் பயந்து அஞ்சி அகன்று ஓடிவிடுகிறான். பின்னர் விளக்குக்கொண்டு புக்கு நோக்குமிடத்து அது பாம்பன்று, பழுதை (கயிறு) என உணர்கின்றான். முதன்முறை அவன் அங்கு பாம்பைக் கண்டான். அதைக் கண்டதும் எய்தும் அச்சத்தை எய்தினன். இரண்டாம்முறை கயிற்றைக் கண்டான். அலட்சியம்கொண்டான். இவ்விருசமயங்களிலும் பாம்பைக் கண்டபோது கயிற்றைக் காணவில்லை, கயிற்றைக் கண்டபோது பாம்பைக் காணவில்லை. அதுபோல நாய் உருவம் செதுக்கப்பட்ட கருங்கல்லை தொலைவிலே இருந்து பார்த்தபோது அது உண்மை நாயாகப்பட்டதேயல்லாது கல்லாகத் தோன்றவில்லை. அருகில் சென்றபோது கல்லாகத் தோன்றிற்றே ஒழிய நாயாகத் தோன்றவில்லை. ஆகவே நாயைக் கண்டபோது அக்கல்லைக் காணவில்லை, கல்லைக் கண்டபோது முன் தனக்குத் தென்பட்ட உண்மை நாயைக் காணவில்லை.

இதுவே இதன் பொருளாகும். தமிழ் நாட்டுச் சிற்பிகளின் சிறப்பிற்கே தான் ஓர் நற்சாட்சியாக நின்று நிலவிவரும் இப்பழமொழி நுண்பொருளும் மறைந்து தனிச்சிறப்பும் இழந்து வழங்கலாயிற்று.

தனித் திறமை

(S. P. Arockiasamy H. M. R. C. School, Satharasanpatti)

"தோன்றிற் புகழோடு தோன்றுக; அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று" என்ற அர்த்த புஷ்டியுள்ள செந்நாப் போதரின் சொற்றிதப்படி பூதவுடம்பிற் புகழுடம்பே சிறப்புடையது. சில வாழ்நாட் பல்பிணிக் கொள்கலமாகிய இவ்வென்புடையாக்கை விரைவில் அழியும்பான்மைத்து. எல்லையில் காலம் எழிலுடன் இலங்கும் புகழ் யாக்கை என்றும்அழியா மேன்மைத்து. முயற்சியுடைய மக்கள் ஊனுடம்மை வளர்த்தலினும் புகழுடம்பை வளர்த்தலிலேயே கண்ணோட்டம் செய்கின்றனர். உலகிலேயே புகழ்பெறவாழ இயலாதான், விலங்கினும் கடைபட்டோனவன். அன்னான் உலகினிற்றோன்றுதலினும் தோன்றாதிருத்தலே சால்புடைத்தென்பர் ஆன்றோர். புகழுற வாழ்க்கை நடாத்துபவர் உயர்ந்த குணங்களினுறைவிடமாகவும், ஒழுக்கத்தின் பேழையாகவும், அறிவின் களஞ்சியமாகவும், ஊக்கத்தின் ஊற்றாகவும், முயற்சியின் ஆணிவேராகவும் திகழ்வர்.

உலகில் வழங்கும் பல்திறப்பட்ட கலைத்துறைகளிலேயே, இயற்கையாகத் தமக்கு எத்துறையில் மிகுந்த அபிலாஷை உண்டாகின்றதோ அத்துறையிலே நுழைந்து ஊக்கமும் உண்மையுங்கொண்டு உழைத்துக் கைதேர்ந்து அக்கலையிலே தன்னின் ஒப்பாரும் மிக்காருமிலரெனப் பெயர்பெற்று உலகிலே பலரும் அந்தக் கலையினை விரும்புமாறு பரவச்செய்து அதைப் பல்லாற்றானும் வளர்ப்பதே தனித்திறமைபெற வழியாகும்.

பண்டைகாலத்தேயிருந்து நம் பாரத தேசம் பலவகைக் கலைஞானங்களில் மேன்மையுற்று விளங்குகின்றது. நன்னாகரீகம் படைத்து சீரும் சிறப்புமுற்றுத் திகழும் பன்னரும் பெருமை கீர்த்தியுடைய மாந்தர்வாழ் மேனாட்டில் அஞ்ஞான இருளிற் பொதிந்து அறிவொளி தோன்றப்பெறாமல் தயங்கிய பல்லாண்டுகட்கு முன்னரே இந்தியத்தாய் சகல கலாவல்லுனராகிய சிரோன்மணிகளை யீன்று விபுத சித்திபெறச் செய்தது தனித்திறமை என்றால் மிகையிலது. நவநாகரீகம் தாண்டவமாடும் தற்காலை, விவசாயம், உத்யோகம், வியாபாரம், விஞ்ஞானம், விபுதஞானம், காவியம், ஓவியம், சிற்பம், பூதபௌதீக ஆராய்ச்சி, யுத்தப்பிரசண்டம், போர்முனைத் தளவாடங்கள், உயிரைப் பிரிக்கும் திடீர் பிரயோகங்கள், சங்கீதம், சபா, நடனம் போன்ற பல

ஊ211/M11PP N46:37.5:6

திறப்பட்ட துறைகளில் புத்துணர்ச்சியுற்று திகழ்ந்துவருவதும் தனித்திறமையினுல்தான் என்பது பரிஷ்காரம்.

இக்குறிகோள், திறமை என்ற பகுதியிலிருந்து தொகுதியாக விளங்குவது தனித்திறமை. தனித்திறமையைத் தொகுதியாக குறித்த விபரம் நோக்கற்பாலது. அறிவும், பொறையும் அரிய காவியங்கட்கும் உறைவிடமான ஔவைப்பாட்டி அம்மையார் "கற்றது கைமண்ணளவு, கல்லாததுலகளவு" என்று கலைமடந்தை ஓதுகிருள் என்றதும் "கல்வியில் கரையில" என்றதும் சீர்தூக்கின், அறிவு வளர்ச்சிக்கு முடிவில்லை என்பது பொருள்.

இவைகளில் வீரத்துவஜம் நாட்டி வெற்றிபெறச்செய்வது தனித்திறமை என்பது வெள்ளிடைமலை. நாட்டத்திலும், ஆட்டத்திலும், ஓட்டத்திலும், உத்யோகத்திலும், ஊழியத்திலும், உபசரித்தலிலும், படையிலும், பாஷாபிமானத்திலும், வித்வாமிஷத்திலும் வேதாந்தத்திலும், தேசாபிமானத்திலும், வியாபாரத்திலும் தனித்திறமையுற்ற மேதாவியையே இற்றைய உலகமும் போற்றுகின்றது.

உலகையே ஜெயித்த உன்னத சக்கரவர்த்தி அலெக்சாண்டரின் வீரமும், பாபரின் புயவலிமையும், நெப்போலியனின் வல்லாண்மையும், ஆகாயவிமான அபூர்வசக்தி கண்ட, மில்பர்ரைட், ஆர்வின்ரைட் என்பவரின் ஆராய்ச்சியும், மின்சாரசக்தி கண்ட மைக்கெல் பெரெடெயின் விபுதசித்தமும், புகைவண்டி, சப்மரின், கிராமபோன், ரேடியோ எக்ஸ்ரே, இவைபோன்ற நவீன யந்திரங்களைக் காணவும், ஆற்றின்மீது தொங்கு பாலங்கட்ட ஊகித்த ஸர் ஸாமுயேலின் நுண்ணறிவும் இன்னவரை விமர்ச்சனராக்கியதும் தனித்திறமைதானென்பதை மறுப்பர் யாருளார்? சினிமா உலகத்தில் மனோகர மனோன்மணிகளாக விளங்குபவர்கள் தனித்திறமை பெற்றதினுலன்றோ !

ஆதலால் தனித்திறமை மானிட ஜென்மம் ஒவ்வொருவருக்கும் அகத்தியமாயுளது. இதைப் பெறுவிக்க நமது மாணவ மாணவிகளின் குறைபாடென்ன? காலக்கிரமத்தில் பாடசாலை வாராமை, பாடசாலைக்குத் தொடர்ந்து வாராதிருத்தல், பிறனைப் பார்த்தெழுதல், கணிதத்தில், வாய்ப்பாடு, செய்யுள் பாராயணம் இவற்றில் அசிரத்தை. இதர பாடங்களில் மேலிழுந்தவாரித்தனம், மேல் வகுப்புகளில் மௌனவாசிப்பு, படித்த பாராவைச் சுருக்கிச் சொல்தல், இவற்றில் அப்பியாசமின்மை.

210008.
சென்னை-600 008

ஆசிரியர்கள் :—தாட்சண்யம் பார்த்தல், சளைத்தகுணம், கால அட்டவணைப்படி பாடங்கள் நடவாதிருத்தல், முந்தின நாள் பாடத்தைப்பற்றிய சிந்தனையற்ற கேள்விகள். ஒவ்வொரு பாடமும் முடிந்தவுடன் பயிற்சிக்கேள்விகள் இல்லாமை, இரண்டொரு கேள்விகள் கேட்டாலும் கூட்டத்தில் கோவிந்தா என்றவாறு ஒரே சமயத்தில் ஒரே கேள்விக்கு எல்லோரையும் பதில் சொல்ல விடுதல், கேள்விகளுக்குத் தகுந்த பதில் சொன்னவன், வகுப்பில் முதல்தரமான பிள்ளை, இவர்களுக்குத் தேர்ச்சி சின்னம் அளியாதிருத்தல், ஒரே வகையான கணக்குகள், வெறும் நம்பரையுடைய கணக்குகள் இவைகளால் மாணவ மாணவிகளின் தனித் திறமையைக் காண முயல்வது துர்லபம்.

தனித்திறமையில்லாத வித்தியார்த்திகள் பாடசாலை பரீக்ஷயும்போதும், சர்க்கார் பரீக்ஷயும்போதும் அபலமுற்று அங்கலாய்ப்பதை நிதரிசனமாகக் காண்கின்றோமன்றோ! ஆகலான்!

நிலமதனில் உலகுவப்பக்ககலையுணர்த்தும் வளமையோரே
பலன் பெறவே தளர்ச்சியுறும் குழவிகளின் பால்மனத்தே
களங்கமிலாத் தனித்திறமை உளமதனில் கதிர்த்திலகி
நலம் பெறவே விளைத்திடுவீர் நூங்குற்ற நூதனரே.

திண்டிவனம் ஸ்ரீ நாகம்மாள் பெண் பாடசாலை கல்விவாரக் கொண்டாட்டம் 19-10-'46

இஃது A. A. M. High School தலைமைத் தமிழாசிரியர் **வித்வான் திரு. ஆ. பழநிஸ்வாமி சிவாச்சாரியார்** அவர்கள் தலைமையின் கீழ் நடந்தேறியது. மாணவிகளால், கும்மி, கோலாட்டம், நடனம், "பேராசை பெருநஷ்டம்" என்ற பொருள்பட ஒரு சிறு நாடகமும், நடித்துக் காண்பிக்கப்பட்டன. தலைவரவர்களாலே "கல்வி பெண்களின் உயர்வு" என்பதைப்பற்றி சொற்பொழிவு நடந்தது.

நகரத்தில் உள்ள ஆசிரிய ஆசிரியைகள், விஜயம் செய்து இருந்தனர். விசேஷமாக R. C. Girls' School சகோதரிகளும், ஆசிரியைகளும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஷை பாடசாலையின் தலைமை ஆசிரியர் அப்பாசாமியால் அனைவருக்கும் கல்விவாரக் கமிட்டியார் சார்பில் நன்றி கூறப்பட்டது. தேச வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

A. Appasami,
Teacher, Manager.

பாடக்குறிப்பு

(R. Venkataraman)

பாடம்: இயற்கை. வகுப்பு: V

நோக்கம்:—செடிகொடிகள் எப்படித் தங்கள் விரோதிகளிடமிருந்து காப்பாற்றிக்கொள்ளுகின்றன என்பதைத் தெரிந்துகொள்ளுதல்.

உபகரணம்:—இலந்தை, கொடுக்காப்புளி, தர்ப்பைப்புல், காஞ்சுறி முதலியன.

விஷயம்	முறை
பீடிகை. பிராணிகளின் தற்காப்பு—என்னென்ன உறுப்புக்கள் அமைந்திருக்கின்றன — என அறிதல். (கொம்பு—பல்—நகம்—அலகு.)	மாட்டினிடம் நீ எதாவது சேஷ்டை செய்தால் அது என்ன செய்கிறது? பூனை குட்டிபோட்டிருக்கும்போது அதைத் தொடு, அல்லது அதனிடம் செல், அல்லது அதனிடம் எதாவது சேஷ்டை செய். அது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள என்ன செய்கிறது? இதுபோலவே, செடிகொடிகளும் எப்படித் தங்களைக் காப்பாற்றிக்கொள்கின்றன என அறிவோம்.
புதிய பாடம்	
வளரும் செடிகளும், கொடிகளும், இளங்குருத்துக்களும் பிராணிகள் தின்று நாசம் செய்யப்படுகின்றன.	உபகரணமாகக் கொண்டுவந்தவைகளைக் காட்டி அவற்றிலுள்ள ஜந்துக்களையும், தின்றுள்ள இலைகளையும் சிறுவர்களுக்குக் காட்டி உற்று நோக்கச்செய்தல்.
முட்களுள்ள தாவரங்களைப் பிராணிகள் அழிக்கமாட்டா.	ரோஜா, கொடுக்காப்புளி, இலந்தை ஆகிய உபகரணங்காட்டி உற்றுநோக்கச்செய்தல்.
சில செடிகளில் உள்ள சுணையும் இலையில் முட்களும் நிறைந்திருக்கும். சிலவற்றில் சுணைமாத்திரமிருக்கும். இவை நம்மேல்பட்டால் எரிச்சலும் அரிப்பும் உண்டாகும். இவ்வித செடிகளையும் பிராணிகள் தொடமாட்டா.	பவளமல்லி, பூசணி போன்ற இலைகளைக் கையில் கொடுத்துத் தடவி பார்க்கச் சொல்லுதல். காஞ்சுறி இலையைக் கையில் தொடச் செய்தல். இவற்றிலிருந்து நீ என்ன அறிகிறாய்? பூசணிக் கொடியின் இலையில் என்ன இருக்கிறது?
பிரண்டைக் கொடியில் ஒருவித ரசம் இருக்கிறது. இதைத் தொட்டால் அரிப்பு உண்டாகும்.	(பிரண்டையைக் கையில் கொடுத்து) அதை நசுக்கிச் சோதனை செய்துபார்.

சில செடிகளில் ஒருவித விஷப் பாலிருக்கும்.

தருப்பை, நாணல் போன்ற கூரான ஓரமுடையவைகளைப் பிராணிகள் தொடமாட்டா. இவை பிராணிகளின் வாயைக் கிழிக்கும்.

இவை தவிர மற்றும் சிலவற்றை நாம் பயிரிட்டு அதன் மூலம், அவற்றைப் பாதுகாக்கும்படி கடவுள் ஏற்படுத்தியிருக்கிறார்.

எருக்கன், கள்ளி முதலியவற்றை ஒடித்துக்காட்டுதல்.

தருப்பை, நாணல் போன்றவைகளைக் கையில் கொடுத்து அதைத் தொட்டும், மேலாகத் தடவியும் பரிசோதிக்கச் செய்தல்.

வீட்டில் தோட்டம், பயிர்க்குழி முதலியன போட்டிருக்கிறாயா? எப்படிப் பாதுகாக்கிறாய்? அதை ஏன் பாதுகாக்கிறாய்?

கரும்பலகைச் சுருக்கம்

1. பிராணிகளைப்போலவே, தாவரங்களுக்கும் தற்காப்புகள் உண்டு.

2. நாகதாளி, கருவேல், இலந்தைபோன்றவை. முட்களிருப்பதால் இவற்றைக் கால்நடைகள் தின்பதில்லை.

3. பால் நிறைந்திருக்கும் எருக்கை, கள்ளி போன்றவைகளையும் கால்நடைகள் தொடமாட்டா.

4. சுணைமுள் நிறைந்திருக்கும் காஞ்சுறி போன்றவைகளையும் பிராணிகள் தின்னா.

5. ஓரங்கள் கூர்மையாயிருக்கும் தருப்பை போன்றவற்றையும், ஆடுமாடுகள் உண்பதில்லை. இவை வாயையும், உடலையும் கிழிக்கும்.

6. பலனை உத்தேசித்து நாம் பயிரிடும் செடிகொடிகளுக்கும், பந்தோபஸ்து இருப்பதால் அவற்றையும் தொடமுடியாது.

அப்பியாசம் :—(1) நாம் பயிரிடும் செடிகொடிகளை எவ்வாறு பாதுகாக்கிறோம்? (2) காஞ்சுறி, தருப்பை போன்றவற்றை ஏன் பிராணிகள் தின்பதில்லை? சில பாலுள்ள தாவரங்களைக்கூறி அவற்றை ஏன் தின்பதில்லை எனக் கூறு.

மூங்கில் இலையை ஆடுமாடுகள் தின்னுமா? என்?

சித்தார்த்தரின் துறவு (சரித்திரம்)

(கொத்து 37, மலர் 4 பக்கம் 89-ன் தொடர்ச்சி)

சிறு நடிப்பு

[A. Kathirvelu]

காக்ஷி 3

இடம் :—சித்தார்த்தரின் ஏகாந்த மண்டபம்.

பாத்திரங்கள் :—சித்தார்த்தர், இசைவாணி, கலைவாணி மற்றும் பலர்.

(இசைவாணி, கலைவாணி, நடனமாது, தாளக்காரன் இவர்களெல்லாம் அயர்ந்து தூங்குதல். சித்தார்த்தர் மௌனமாக இருந்து சற்று பொறுத்து அவர்களின் நிலையைப் பார்த்து)

சித்தார். :—(நடனமாதைப் பார்த்து மெல்லிய குரலில்) என் அவளின் மிருதுவான கரங்கள் அப்படியே தளர்ந்து காணப்படவேண்டும். பாவம் நடனம்! ஓயாத நடனம்!! நான் உறங்குகிறவரையில் நடனம்!!! அதனால் கால்களும் கைகளும் சோர்ந்துவிட்டன அவ்வழகிக்கு. (தாளக்காரனைப் பார்த்து) அதோ! தாளக்காரன் தாளத்தைக் கையில் வைத்தபடியே தூங்குகிறான். இத்தனை பேர்களுக்கும் துன்பம் கொடுத்து நான் ஒருவன் வாழவேண்டும். என் தந்தை என்மீதுள்ள ஆசையால் ஏற்படுத்தியவைகள். இவைகளெல்லாம் என்னை மகிழ்விக்கத்தானே? இருந்தாலும் இவர்கள் நிலை என்ன? வருத்தந்தானே: சங்கீதம், கலை என்றால் அதை அவர்களே மனமுவந்து, தாங்களே அனுபவித்து பாடினால்தானே அதில் கலைமணம் வீசும். இவையெல்லாம் நிர்ப்பந்தத்திற்காகத்தானே செய்கின்றனர். இதில் கலைமணம் வீசுமா? இந்த பாவங்களையெல்லாம் ஏற்று இவர்களைத் துன்புறுத்தியவன் நான்தானே. உலகில் துன்பமில்லாமல் இன்பமில்லையா? எல்லோரும் இன்புற்றிருக்க எண்ணுவதே பிறவிப் பயன். எல்லோரிடமும் இயங்கும் ஆத்மா ஒன்றுதானே. (ஆழ்ந்து சிந்தித்தல்). ஆம்! அதுதான் சரி. (எழுந்து தன் மனைவியிருக்கும் அந்தப்புறத்திற்குச் செல்லுதல்.)

காக்ஷி 4

இடம் :—யசோதரையின் பள்ளியறை.

பாத்திரங்கள் :—யசோதரை, தாதி, குழந்தை, சித்தார்த்தர்.

காலம் :—இரவு.

(யசோதரை, குழந்தை, தாதி யாவரும் உறங்குதல்.)

சித்தார். :—(தாயும் சேயும் உறங்குவதைப் பார்த்து தாழ்ந்த குரலில்) என்னே! அழகிய வதனங்கள் அயர்ந்து தூங்கும்பொழுதுகூட ஒளி வீசுகின்றனவே, மாசற்ற மனம் அன்பின் ஆலயம். சேயினிடம் இவ்வளவு இரக்கமா? அன்பின் அணைப்பு (குழந்தையைப் பார்த்து)

சித்தார். :—உன் கனிவுதான் என்னே. களங்கமற்ற உள்ளம் என் கனியமுதம் (குழந்தையைத் தொடுவதற்குக் கரங்களை நீட்டுதல். உடனே மனம் மாறிவிடுதல்) எல்லாம் பிரேமை (கரங்களை அப்புறம் எடுத்துக்கொண்டு மறுபுறம் திரும்புதல்.) அன்று நான்...உன்னை மணந்தபோது... ஆம்...ஆம்...ஜீவன்கள் துடிக்கின்றன...ஆம் மணிவிளக்கே, உன் ஜுவாலைகள் ஆடவும் இல்லை, அசையவும் இல்லை. தெரிந்தேன் அறிந்துகொண்டேன் (சரேலெனப் புறப்பட்டு வெளியே சென்று வாயிற்படியருகில் நின்று) எங்கே போவது எதைத் தேடுவது? (ஆழ்ந்த சிந்தனையுடன் குழந்தையிருக்குமிடத்திற்கு வருதல்.) ஆம், அதுதான் சரி. இறைவனிட்ட கட்டளையைப்பற்றி நமக்கென்ன கவலை! இதோ போகிறேன். (அந்தப்புறத்தை விட்டு வெளியே போதல்.)

காக்ஷி 5

இடம் :—சுத்தோதரின் சபாமண்டபம்.

காலம் :—பகல்.

பாத்திரங்கள் :—சுத்தோ., மந்திரி, குதிரைக்காரன், யசோதரை.

சுத்தோ. :—(மந்திரியைப் பார்த்து) நம் சித்தார்த்தனின் குதிரைக்காரன் இன்னும் வரவில்லையா?

மந்திரி :—(எழுந்து) கூடிய சீக்கிரம் தங்கள் குமாரரை உடன் அழைத்துவருவான்.

(குதிரைக்காரன் சித்தார்த்தரின் உடையுடன் பிரவேசித்து அரசனிடத்தில் கொடுத்தல்.)

சுத்தோ. :—(சித்தார்த்தனின் உடையை கையில் வைத்துக்கொண்டு) என் மைந்தன் வர மறுத்தானு? சித்தார்த்தன் அரச யோகத்தையும், ஆடம்பரங்களையும் துறந்தானு? எதற்காக?

குதிரைக். :—(வணக்கத்துடன்) மண்டலாதிபா! எவ்வளவோ வருந்தி அழைத்தேன். நானும் உடன் செல்லவே பிரயாணப்பட்டேன். அவர் என்னை மறுத்து தான் மேற்கொண்ட பிரயாணம் மிகக் கடுமையானது என்றும், அதை என்னுல் தாங்கமுடியாது என்றும் சொல்லி துன்பமில்லாது மனிதன் இன்புற வழிகள் கண்டுபிடிக்கப்போவதாயும் சொல்லி எல்லாரிடமும் இயங்கும் உயிர் ஒன்றுதான் என்றும் வெளியாபரணங்களெல்லாம் வெரும் பகட்டென்றும் பித்தரின் கற்பனையென்றும், தன் ஆடையாபரணங்களை எல்லாம் கழற்றிக் கொடுத்துவிட்டு, நான் இன்றுமுதல் இளவரசனும் அல்ல, உன்னைப்போல் ஒரு சாதாரண மனிதனென்று சொல்லி நேரே போய்க்கொண்டிருந்தார். எவ்வளவு மறுத்தும் கேட்கவில்லை மகாராஜா.

சுத்தோ. :—(விசனத்துடன்) அப்படியானல்......(கண்ணீர் விடுதல்)

யசோ :—ஹா! என் சுவாமி போய்விட்டாரா, எங்களைப் பிரிந்து போய்விட்டாரா! தாயும் சேயும் கட்டுக்காவலென்று சொல்லாமலே போய்விட்டாரா! பட்டுபோன்ற பாதம் புழுதியில் புதைய, கல்லிலும், முள்ளிலும் கால்கள் கடுக்க நடந்தா போனுர்! பொன்னை நிகர்க்கும் மேனி பஞ்சணையில் புரண்டதுபோய் புல்லினிற் புரள, புழுதியில் படிய, கானலிற் கறுத்து, மழையில் நனைந்து மாசுபடா தேகத்தை மரக்கூட்டங்கள் காக்குமென்று காட்டையா நாடினுர்! அறுசுவையில் ஒரு சுவையும் குறையாது கொள்ளும் உணவிருக்க, காட்டில் கிழங்குகளையுண்டு காலங்கடத்துவதோ! சகல சுகபோகங்களையும் அனுபவிக்கவேண்டிய இவ்விளமையில் சந்நியாசமா, அதற்குப் பருவமில்லையா, என் சுவாமி! என் பதி, அவரை அழைத்து வந்தே தீருவேன். இல்லையேல் அவருடன் செல்வேன். அவரில்லாத இந்த அந்தப்புரம் கொடும் விலங்குகள் வாழும் காடுபோல் அல்லவா இருக்கிறது. (அரசனைப் பார்த்து) மாமா! தாங்களும் இப்படி இருந்தால் என் நிலை என்னுவது?

மந்திரி :-(யசோதரையைப் பார்த்து) அம்மா, இதல்லாம் என்ன ! சாதாரண மக்களின் மனப்பான்மையில் மனதைப் புண்ணுக்கிக்கொள்ளுகிறீர்கள். (அரசனைப் பார்த்து) வேந்தே ! தாங்களும் இப்படியிருந்தால் என்போன்றவர்களின் நிலையென்ன ?

சுத்தோ. :—மந்திரியாரே ! நீர் அறியாததா? அறிந்து அறியாதது போல் பேசுகிறீரே. இன்று சென்று அழைத்துவரவேண்டிய ஏற்பாடு செய்யுங்கள்.

மந்திரி :—உத்தரவு மகாராஜா ! (கலைந்துபோதல்.)

காக்ஷி 6

இடம் :—காடு.

காலம் :—காலை.

பாத்திரம் :—சித்தார்த்தர்.

(ஏகாந்தமான ஓரிடத்தில் அமர்ந்து) : ஆஹா ! என்ன இனிமை! அமைதியின் இருப்பிடம் ஆரண்யமென்ருல் இதை யார் மறுக்கமுடியும் ? காட்டாற்றின் கானம் காட்டையே ரமிக்கச்செய்கின்றது. காலை சூரியன் கதிர்களை விரித்தால் கதிர்களுக்கொன்ருய் காட்டின் அரும்புகள் நாணிக் கோணி நறுமணம் கம்மென வீசுகிறதே. (சுற்றுமுற்றும் பார்த்து) ஆஹா ! இந்த ஆனந்தவிடுதியை விட்டு இன்பமென ஏமாற்றும் ஓர் இல்லறம் இது கழலாது விளங்கும்.

சித்தார்த். :—ஏவலாளர்கள் என்னும் காவலாளர்கள் அரண்மனை என்னும் சுவற்றிற்கிடையே சிறைவாசம்—இதினின்றும் தப்பாதிருக்க பாசமெனும் கதவு; அறையும் திறந்தால் ராஜயோகம் என்னும் பெரிய தாள். இதெல்லாம் போதாதென்று மணிமுடி ஒரு பெரிய பூட்டு அப்பா !! என்ன கடுமையான தண்டனை ! (சற்று யோசித்து சந்தோஷமாக) ஆம், இன்றே எனக்கு நல்ல நாள். நான் விடுதலை அடைந்தேன். பட்டம்பதவிகளெல்லாம் வெறும் பகட்டு ; உற்ருர் உறவினர் உறுஞ்சும் குழல்கள், மனைவி, மக்கள் இன்பமாகிய ஒளியைப் பரவாமலும், பார்க்காமலும், துன்பத்திலேயே உழல இடையே இருந்து மறைக்குந் திரைகள். இன்றே என் திரைகள் கிழிக்கப்பட்டன. இன்பமாகிய ஒளியில் பிரகாசிக்கிறேன். இந்த விருக்ஷங்களைப் பார். இவைகளின் கனிவுதான் என்ன. சகல ஜீவராசிகளுக்கும் பசிப்பிணியைப் போக்க கனிந்து உதவுகின்றன. நிற்க நிழல், கூடுகட்டி குடியிருக்கும் பக்ஷிகளின் நகரம். இதன் பெருமைதான் என்ன ! இவ்வாழ்க்கையையன்றோ மனிதன் கடைபிடிக்கவேண்டும். இதுவன்றோ துன்பமில்லாத இன்ப வாழ்வு. பிறகு சண்டையேது, சச்சரவேது, துன்பமேது ? எல்லாம் இன்பமாகத்தானே ஒளிக்கும். இவ்வொளியே உலகெலாம் பரவட்டும். (கண்களை மூடிக்கொண்டு) ஓம் ! சாந்தி ! சாந்தி !! சாந்தி......

சுபம், சுபம், சுபம்.

சிறு கதை: நரியின் தீர்ப்பு

ஒரு வியாபாரி தன் குதிரையின்மீது வியாபாரச் சரக்குகளைப் போட்டுக்கொண்டு கழனி வெளி வழியாக அடுத்த கிராமச் சந்தைக்கு ஓட்டிக்கொண்டுபோனான். போகும் சமயத்தில் கழனியில் ஒரு நரி நண்டுகளைப் பிடித்துத் தின்றுகொண்டிருப்பதைக் கண்டான். கேலிக்காக நரியை வியாபாரி மிரட்ட, நரி பயந்து ஓடிவிட்டது.

வியாபாரி சந்தையை அடைந்ததும் தன் குதிரையைச் சந்தையின் அருகிலுள்ள ஒரு வாணியன் வீட்டுச் செக்கில் கட்டிவிட்டு வியாபாரம் செய்யச் சென்றான். வாணியன் வீட்டிலிருந்து வெளியே வந்து செக்கில் குதிரை கட்டியிருப்பதைக் கண்டு அதை வஞ்சகமாக அபகரிக்க எண்ணி குதிரையை வீட்டினுள் ஓட்டிக் கட்டிக்கொண்டான். வியாபாரத்தை முடித்துத் திரும்பிய வியாபாரி கலங்கி, பல இடங்களில் தேடித் திரிந்து, கடைசியில் வாணியன் தன் வீட்டில் மறைத்துவைத்திருப்பதைக் கேட்டு, தன் குதிரையை விடும்படி கேட்டான். வஞ்சக நெஞ்சுடைய அவ்வாணியன் தன் செக்கு குட்டி போட்டதாகக் கூறி குதிரையைக் கொடுக்க மறுத்தான்.

வாணியன் வஞ்சக மொழியைக் கேட்ட வியாபாரி உளம் உடைந்து ஊரிலுள்ள பெரியவர்களிடம் முறையிட்டான். அக்குதிரை உன்னுடையதாயின் சாட்சியை அழைத்துவா என்று பெரியோர்கள் அவனைப் பணித்தார்கள். தனக்குச் சாட்சி சொல்ல அவ்விடம் யாரும் இல்லாததை நினைத்து வருந்தும் தருவாயில், முன் தான் வரும் மார்க்கத்தில் கண்ட நரியின் ஞாபகம் வந்து அதை அழைத்துவரச் சென்றான். முன் தான் கண்ட இடத்தில் நரியாரைக் கண்டு தனக்கு ஏற்பட்ட கஷ்டத்தைக் கூறி, குதிரை தன்னுடையதென சாட்சி சொல்ல வேண்டினான்.

நரியும் உடன்பட்டு வியாபாரியைக் கூட்டத்திற்கு அனுப்பிவிட்டது. கூட்டமும் தொடங்கிற்று, நரியை எதிர்பார்த்திருந்தார்கள். (நரி தந்திரமாக) நேரஞ்சென்று கூட்டத்திற்குப் போனது. கூட்டத்திலுள்ள நாட்டாண்மைக்காரர் நரியின் தாமதத்தைக் கேட்டு நரியின்மீது கோபங்கொண்டார். (நரி பயந்ததுபோல் பாசாங்குசெய்து) "தலைவரே! மன்னிக்கவேண்டும். கூட்டத்திற்கு விரைந்துகொண்டிருந்தேன், வரும் வழியில் ஆறு ஒன்று பற்றி எரிந்துகொண்டிருந்ததால் வரத்தாமதமானது. ஐயனே! என்னுடைய தாமதத்தைப்பற்றி மன்னிக்க வேண்டுகிறேன்" என்று கூறிற்று.

(கூட்டத்திலுள்ள எல்லோரும் நகைத்து நரியைப் பரிகசித்து) "மதியற்ற நரியே! ஆறுஎங்கேயாவது பற்றி எரியுமா?" என்று பரிகசித்தார்கள். "பெருமானே! மன்னிக்கவேண்டும்; ஆறு பற்றி எரியாதென்றால் செக்கு எங்கேயாவது குட்டி போடுமா? இதற்கும் ஒரு பஞ்சாயத்து!" என்று பெருநகைகொண்டது. நரியின் தீர்ப்பைக் கேட்ட பெரியோர்கள் நாணி, குதிரையை வியாபாரி பெற்றுக்கொள்ளச்செய்து, வஞ்சகனை வாணியனைத் தண்டித்து, நரியைப் புகழ்ந்தார்கள்.

"மரபு அறிந்து மார்க்கம் செய்." **C. Abraham**, Chetpet.

கணிதப்பகுதி

M. Kulandaisamy, H. M., Aided E. School, Palayam

பின்னம்

முழு பொருள்களை 1, 2, 3, 4 என கணக்கிடுகிறோம். அதைப் போல் முழு பொருளுக்குக் குறைந்த அளவுள்ள கருத்தைக் காட்டுவதே பின்னம் எனப்படும். அதாவது : ஒன்றுக்குக் குறைந்தது. இந்த கருத்தை ஆரம்பத்தில் பிள்ளைகளுக்கு நன்கு விளக்கவும். இதற்காக தனித்தனி அளவுள்ள ($\frac{3}{4}$, $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{1}{8}$, $\frac{1}{16}$, $\frac{1}{3}$, $\frac{1}{5}$) போன்றவைகளுக்கு கன சதுர கட்டைகளாவது, படங்களாவது, வேறுவித உபகரணமாவது இருக்கவும். விளக்கும்போது மாணவர்களுக்குப் பிரியமுள்ள தோசை, வடை போன்றவை மூலம் கற்பிக்கவும்.

I. ஒரு பொருளைப் பல சமபாகங்களாகப் பிரித்து அதில் ஒன்று அல்லது பல பாகங்களைக் குறிப்பது பின்னம். உ-ம் : $\frac{3}{8}$.

இதை இரண்டு விதமாக அர்த்தம் செய்யலாம்.

$\frac{3}{8}$ = 1-ல் $\frac{3}{8}$ அல்லது 3-ல் $\frac{1}{8}$.

$\frac{3}{4}$ = 1-ல் $\frac{3}{4}$ அல்லது 3-ல் $\frac{1}{4}$.

II. பின்னத்தில் 2 முக்கிய கருத்து உண்டு. அதாவது :

(1) எத்தனை பாகங்களாகச் செய்கிறோம் என்பது.

(2) அதில் எத்தனை பாகம் எடுக்கிறோம் என்பது.

$\frac{3}{8}$-றில் 8 பிரித்த மொத்த பாகம், 3 எடுத்த பாகம்.

8 பகுதி (ஹாரம்) 3 தொகுதி (அம்சம்).

கூட்டல்:—ஒரு பின்னத்தை இன்னொரு முழு எண்ணோடவோ அல்லது பின்னத்தோடவோ கூட்டுவதற்கு 2 பின்னங்களும் ஒரே இனமாக இருக்கும்படி செய்யவேண்டும். ஒரே இனமாக மாற்றுவதற்குப் பொது பகுதி எண் கண்டுபிடித்து அதே பகுதிக்கு (அந்த பொது பகுதிக்கு) பின்னங்களை மாற்றியபின் அவற்றின் தொகுதி எண்களைக் கூட்டி விடையின் தொகுதி எண்ணாகவும் பொதுப்பகுதியை விடையின் பகுதியாகவும் எழுதவேண்டும். அவற்றின் வித்தியாசங்களைக் கணிப்பதற்குத் தொகுதிகளின் வித்தியாசத்தைக் கண்டு எழுதவேண்டும்.

உ-ம் : கூட்டல். $\frac{3}{4} + \frac{5}{8}$.

$$\frac{3}{4} + \frac{5}{8} \quad \frac{6+5}{8} = \frac{11}{8} = 1\frac{3}{8}$$ Answer.

கழித்தல் : $$\frac{3}{4} - \frac{5}{8} \quad \frac{6-5}{8} = \frac{1}{8}$$ Answer.

(தொடரும்.)

விடுகதை விடைகள்

[கொத்து 37, மலர் 4, பக்கம் 91-ன் விடுகதைகள்]

விடைகள் :—1. பால். 2. வெட்டுக்கிளி. 3. வயிறு. 4. நெல்விமரம். 5. முட்டை. 6. கோழிக்குஞ்சு. 7. தபாற்கடிதம்.

ஷை விடையளித்தவர்கள்: அந்தந்த விடுகதைகளை அனுப்பினவர் களும் பின் வருபவர்களும்:—R. M. Venkatachalam; Udayanathan; E. Yonoos; S. Venkatesan; E. Abdul Rahim; M. K. Murugaiah; V. Alagu; S. Mariadas & A. Arokiasamy, Pupils, De Britto High School, Devakottah & V. Rayappan, Vembar.

விடுகதைகள்

இது என்ன?

1. குண்டுசட்டியில் கெண்டை மீன்.
2. அர்த்த ராத்திரி ஆட்டம்; அஞ்சாறு பேர் வந்தால் ஓட்டம்.

V. Rayappan.

3. கறுப்புக்காட்டில் பிறந்த வெள்ளைக்குழந்தை மேலேயெல்லாம் ஏறுகிறது. K. A. Arokiasamy, Sendarapatty.
4. நான் ஏறும் குதிரைக்கு ஆயிரம் கண்.
5. மலையிலிருந்து ஒரு சிவப்பு மாடு பிடித்துவந்தேன்; அது வீட்டுக்கு வந்ததும் கறுப்பாய்ப்போய்விட்டது.

S. Venkataramanan, Teacher, Sathanur, Trichy.

6. குளம் வட்டக்குளம்; கொக்கு நெட்டக்கொக்கு; குளம் வற்றிப் போனால் கொக்கு செத்துப்போகும்.

T. S. Fernando, Sathur. (St. Stanislaus' Trg. School.)

7. கண்டு பூ பூக்கும், காணாமல் காய் காய்க்கும்.
8. அரைக்கீரை சிறு பாத்தி, அழகுண்டு மணமில்லை.

K. Baluswamy, Teacher, Palappatti, Velur, Salem.

"பாலையம்பட்டி சென்டர் ஆரம்ப ஆசிரியர் சங்கம்"

12–10–46-ல் அறுப்புக்கோட்டைத்தாலூகா பாலையம் பட்டி சென்டர் ஆசிரிய சங்கம், பாலையம்பட்டி B. P. V. சாலை ஹையர் எலிமெண்டரி பாடசாலையில் ஷை பள்ளித் தலைமை ஆசிரியர் உயர்திரு. K. சங்கரநாராயண ஐயர் அவர்கள் தலைமை யில் கூடிற்று. அவ்வமயம் இராமநாதபுரம் ஜில்லாக் கல்வி அதி காரி உயர்திரு. **ஜனுப் சையத் அப்துல் கையூம் சாஹிப் பஹதூர்** B. A. L. T. அவர்களும், அறுப்புக்கோட்டை ரேஞ்சு ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் உயர்திரு. **S. முகமது ஹபீப்** B. A. L. T. அவர்களும் ஷை ரேஞ்சு ஜூனியர் டிப்டி இன்ஸ் பெக்டர் உயர்திரு. **S. முத்துச்சாமி பிள்ளை** அவர்களும், விஜயம்

செய்தனர். அதுசமயம் கீழ்வகுப்புகளுக்கு **தமிழ்ப்பாட போதனை** என்பதுபற்றி பல ஆசிரியர்கள் பேசினர். பின் ஜில்லாக் கல்வி அதிகாரி அவர்கள் தமிழ்ப்பாடப் போதனையின் போது கவனிக்கவேண்டிய **மொழி, பொருள், கருத்து** என்ற மூன்று முக்ய விஷயங்கள்பற்றி ஓர் நீண்ட சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். கடைசியாக, யாவருக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிதே கலைந்தது.

சங்க காரியதரிசி **K. ராமசாமி,**
பாலையம்பட்டி.

பெண் கல்வி

(K. R. Savarimuthu H. M. R. C. E. School K. Udayapatti.)

(ஐயாச் சிறுவன் ஏழை என்ற வர்ண மெட்டு.)

1. அம்மா பெற்ற தாய்மார்களே அனுப்பக்கூடாதா—
சும்மா திரியும் பெண் கல்வி படிக்கக்கூடாதா—கல்வி
அறிவுவராதா—வீட்டுக் கணக்கெழுதாதா.
2. ஆண்கள்மட்டும் படிக்க பள்ளிக்கனுப்புகின்றீர்கள்—
பெண்கள்படித்தும் பயனில்லை என்று தடுக்குகின்றீர்கள்—
மேனாட்டுப் பெண்கள் பாருங்கள்—சமமாய்ப் படித்துவாரார்கள்.
3. ஆணுக்குப் பெண் அடங்கிநடக்கப் படிக்காமல் செய்தார்—
அடித்து உதைத்துக் கொன்றாலும் வாய் பேசாது செய்தார்
விலைக்கு விற்றிடச் செய்தார்—சமையல் செய்திடச் செய்தார்.
4. பெண்கள் என்ற கண்மணிகளைக் கெடுத்துவிட்டார்கள்—
இந்தியாவில் படிக்காமலே தடுத்துவிட்டார்கள்—
புராணத்தில் எழுதிவிட்டார்கள்-அடுப்பூதவைத்துவிட்டார்கள்.
5. அடிமையென்ற பேச்சை இன்றொடொழித்துவிடுங்கள்—
மனைவியென்பது துணைவியென்று அறிந்துகொள்ளுங்கள்
ஔவையார் படித்த பெண்ணுங்கள்—
செவ்வையாய்ப் படிக்க வையுங்கள்.
6. படித்து உத்தியோகஞ்செய்யப் போராளாம் என்பார்—
துரைத்தனம்போன்ற குடித்தனத்திற்கு படிப்பவசியம்பார்
சிக்கென செல்வெழுதிவைப்பார்—மக்களும் நல்வழி நடப்பார்.
7. அடுப்பூதும் படிப்பைக் கற்ற அம்மாமார்களே—
ஐந்துவயது பெண்களைப் பள்ளிக்கனுப்வீர்களே
அடிமைத்தனம் விடுக்குவீர்களே—
அன்புடனே வாழுவீர்களே. (அம்மா)

Reg. No. M. 1534.

செஞ்சி பீரங்கிமேடு பாடசாலையின் உதவிக்கட்டிட திறப்புவிழா

17-10-46 காலை 8 மணிக்கு ஷை உதவி கட்டிடம், செஞ்சி ரேஞ்சு கல்வி கண்காணிப்பாளர் உயர்திரு. G. இரகுநாதன் B. A., L. T. அவர்களால் திறக்கப்பட்டு, "கட்டாயக்கல்வி" என்பதுபற்றி சொற்பொழிவாற்றப்பட்டது; உடனுகை செஞ்சி மிடில்ஸ்கூல் தலைமையாசிரியர் உயர்திரு. த. திருநாவுக்கரசு முதலியார் B.A. L. T. அவர்களால் "கல்வியும் சமூகமும்" என்பது பற்றியும்; செஞ்சி போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலை தலைமையாசிரியர் உயர்திரு. V. நாராயண செட்டியார் அவர்களால் "பெண்கல்வி" என்பது பற்றியும்; ஷை பாடசாலை உதவி ஆசிரியர் உயர்திரு. கோவிந்தசாமி அவர்களால் "கிராமச் சீர்திருத்தம்" என்பதுபற்றியும்; தென்னாற்காடு ஜில்லா போர்டு மெம்பர் உயர்திரு. ம. து. நடராஜக் கவுண்டர் அவர்களால் "சமூகச் சீர்திருத்தம்" என்பதுபற்றியும் சொற்பொழிவுகளாற்றப்பட்டது. பின்னர் ஆசிரியர்களால் "காமிக்"; மாணவ மாணவிகளால் கோலாட்டமும், கும்மியும்; மாணவர்களால் "சகாராவாசிகள்" என்பதுபற்றியும் நடிக்கப்பட்டது. இறுதியில் பாடசாலை மானேஜர் M. கேசவ செட்டியாரால் வந்தனோபசாரம் கூறப்பட்டும், தாம்பூலம் வழங்கப்பட்டும், கூட்டம் இனிது சம்பூர்ணமடைந்தது. ஷை பாடசாலைக் கட்டிடம் கட்டாயக்கல்வி சம்பந்தமாய் திறக்கப்பட்டதாகும்.

M. Kesavan,
H. M. & Manager.

21008
சென்னை 600 008

Editor and Publisher: Rev. Fr. A. Lourduswami, B. A., L. T.,
Headmaster, R. C. Secondary Training and High School.

Printed by Rev. Fr. A. Susai Regis
Supt.. St. Joseph's Industrial School Press, Trichinopoly.
Q. H. No. Ty.—I, 12—11—1946.